| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தண்.வசுந்தராதேவி,<br>எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள்இயக்குநர்,<br>சென்னை– 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி),<br>புதுச்சேரி. |

**ந.க.எண்.246301/பி1/2019** **நாள் : 24.04.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 – மார்ச் 2019, பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு – தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் (Provisional Mark Certificate) விநியோகித்தல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்.103, பள்ளிக்கல்வி ஜி(இ1) துறை , நாள்.19.05.2015.

------

**29.04.2019** அன்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியிட்ட பின்னர், **<u>02.05.2019 பிற்பகல் முதல்</u>** **<u>www.peps.tn.nic.in</u>** மற்றும் **<u>www.peps.nic.in</u>** ஆகிய இரு இணையதள முகவரிகளிலிருந்து அனைத்து மேல்நிலை / உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களுக்கான பள்ளித் தேர்வர்களுக்கும், தனித்தேர்வர் தேர்வுமைய பள்ளித் தலைமையாசிரியர்கள் தமது மையத்தில் தேர்வெழுதிய தனித்தேர்வர்களுக்கும் உரிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (**Provisional Mark Certificate**) அவர்களுக்கு வழங்கப்பட்ட USER ID, PASSWORD-ஐக் கொண்டு பதிவிறக்கம் செய்து அச்சான்றிதழ்களில் உள்ள விவரங்களைச் சரிபார்த்து, பள்ளித் தலைமையாசிரியரின் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டுத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Certificate) வருகிற **<u>02.05.2019 பிற்பகல் முதல்</u>** பள்ளித் தேர்வர்கள்/தனித் தேர்வர்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகள்/தனித் தேர்வர் தேர்வு மையம் மூலமாக விநியோகம் செய்யப்படவேண்டும். மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தேதியில் மட்டுமே தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Certificate) தேர்வர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

பள்ளித் தேர்வர்கள் / தனித்தேர்வர்கள் தேவைப்படின் அவரவர்களே நேரடியாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை **<u>http://www.dge.tn.nic.in</u>** என்ற இணையதள முகவரியிலிருந்து **<u>06.05.2019</u>** பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

..2..

**கூடுதல் அறிவுரைகள்:–**

1. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்படும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை சரிபார்த்து, அவற்றில் தலைப்பெழுத்து, பிறந்த தேதி, பெயர் ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு சான்றொப்பம் இட்டு அளித்திட வேண்டும்.

2. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை விநியோகம் செய்த பின் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்கள் குறித்த பட்டியலை அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பினால், மதிப்பெண் சான்றிதழ்களை அச்சிடும் முன்னர் அத்திருத்தங்கள் கணினியில் ஏற்றப்பட்டு, பிழைகள் அற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுத்தம் செய்து வழங்கப்படும்.

3. தேர்வர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கும் போது மாற்றுச் சான்றிதழில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ் வரிசை எண்ணை எழுதும் கலத்தில் “**Refer Original Certificate**” என்று குறிப்பிட்டு தேர்வர்களுக்கு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுத்தம் செய்து பெறப்பட்டப் பின்னர், சம்பந்தப்பட்ட தேர்வருக்கான பள்ளியின் வசமுள்ள மாற்றுச் சான்றிதழ் பதிவேட்டின் Counter Foil–ல் சம்பந்தப்பட்ட தேர்வரது பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழின் வரிசை எண்ணை, பதிவு செய்து கொள்ள வேண்டும். மேற்படி Counter Foil–ல் மேற்கொள்ளப்படும் பதிவுகள் நிரந்தரமாக பின்வரும் காலத்தில் சரிபார்த்தலுக்காகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

ஒம்/–

**இயக்குநர்**

**நகல்:**

1. தொழில் நுட்ப இயக்குநர், NIC, சென்னை
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்